## கோயமுத்தூர் முதன்மை மாவட்ட நீதிமன்றம், கோயம்புத்தூர்
## அ.வ.ண்.145/2016

நீ,ம.சா.1

2020 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 3 ஆம் நாள் செவ்வாய்கிழமை 1989 ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின்) திரு. ஆர்.சக்திவேல், பி.ஏ., பி. எல்., முதன்மை மாவட்ட நீதிபதி, கோயம்புத்தூர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது)

| | | | |
|---|---|---|---|
| பெயர் | எஸ்.நாகராஜ் | ஜாதி | |
| தகப்பனார் பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூக்கா | | தொழில் | |

**முதல் விசாரணை**

நான் கோவை மாவட்ட நீதிமன்றத்தில் இளநிலை கட்டளைப் பணியாளராக பணிபுரிந்து வருகிறேன். இன்றைய தினம் (03-03-2020) முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் நான் பணியில் உள்ளேன். மு.உ.வ.எண்.145/2016 நீதிமன்ற உத்திரவின்பேரில் பகல் 12.45 மணிக்கு 1 முதல் 6 எதிர்வாதிகளின் பெயர்களான ஜோசப் புஷ்பராஜ், மரிய ஜோசப், எப்.செல்வராஜ், செல்லத்துரை, மரியாபால் சேவியர், கே.செல்வராஜ் ஆகியோர்களது பெயர்களை நீதிமன்றத்தின் நுழைவாயிலிலிருந்து மூன்று முறை கூவி அழைத்தேன். மேற்படி நபர்கள் யாரும் நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை. மேலும் மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு 3.40 மணிக்கு நீதிமன்றத்தின் உத்திரவின்பேரில் மீண்டும் மேற்படி வழக்கின் 1 முதல் 6 எதிர்வாதிகளின் பெயர்களை நுழைவாயிலிலிருந்து மூன்று முறை கூவி அழைத்தேன். 1 முதல் 6 எதிர்வாதிகள் முன்னிலையாகவில்லை. இந்தப்படிக்கு நான் இந்நீதிமன்றத்தின் முன்பாக உறுதியாக கூறுகிறேன்.